RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1410

OPEN ACCESS

# ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்ணிய விழுமியங்கள்

**இரா. அனிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை-625019, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Virtues in Jayakanthan Short Stories

**R. Anitha** [a, *]

[a] Department of Tamil, N.M.S.S. Vellaichamy Nadar College, Nagamalai, Madurai-625019, Tamil Nadu, India

* Corresponding Author:
radhaanitha1974@gmail.com

Received: 25-11-2021
Revised: 27-09-2022
Accepted: 05-10-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Introduction the various stages of development Took place in the 20th century extended to the field of literature. Literary scholars have been instrumental in over coming notion of superiority, inferiority and gender in equality conventional ideas were rejected and new ideas began go emerge. Among them ideas about feminism have gained much popularity and development in the 21st century. Jayakanthan is also notable for his desire for women's emancipation from the perspective of society, politics, economy and religion free from such conditions. He as created works with the aim of librating women from the bondage imposed by the society conclusion feminism can be seen us a way for women to break free from slavery, in marriage, both the man and woman are disappointment if they have expectations and it is clear that life will be better if they give up on each other and live without expectations. In the story, he points out that the solution is to potray the child marriage as nonexistent the world can see that it is wrong to say that the practice of chastity as a tradition that can be traced back to the speciality of Tamils, chastity is only for women and that chastity requires restraint. It is certain that his thoughts and repercussions, no matter how many times pass are events of another period.

**Keywords:** Feminism, Womens Emancipation, Jayakanthan, Swami Sukhabodhanandha, Bharathiyar, Vasuki, Women Chastity

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த பல்வகை வளர்ச்சி நிலைகள் இலக்கியத் துறையிலும் நீட்சி பெற்றன. உயர்வு தாழ்வு மனப்பான்மை, ஆண் பெண் சமத்துவமின்மை போன்ற வேறுபாட்டுணர்வை களைவதற்கு இலக்கியவாதிகள் துணைபுரிந்தனர். மரபு முறை சார்ந்த கருத்தாக்கங்கள் மறுதலிக்கப்பட்டு புதிய புதிய சிந்தனைகள் உலா வரத் தொடங்கின. அவற்றுள் இன்றைய கால கட்டத்தில் ஏற்புடையதும் நவீன சிந்தனையுடையதுமான பெண்ணியம் தொடர்பான கருத்துக்கள் இருபத்தொன்றாம் நூற்றாண்டளவில் மிகுந்த வரவேற்பையும் வளர்ச்சியையும் பெற்றுள்ளன.

ஒரே யொரு பெண்குழந்தை மட்டும் அமைந்தாலும் சொத்துரிமை மறுக்கப்பட்ட வரலாறு மிகக் கொடுமையானது. இளவயதுத் திருமணமும் கைம்மைக் கொடுமைகளும் நிலை நிறுத்தப்பட்டன. இத்தகைய நிலைமைகளிலிருந்து விடுபட்ட சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம் ஆகிய கண்ணோட்டங்களில் பெண்களும் விடுதலை பெற வேட்கையுடையவர்களில் ஜெயகாந்தனும்

குறிப்பிடத்தக்கவராகிறார். பெண்களின் மீது இச்சமூகம் விதித்துள்ள அடிமைத்தளையிலிருந்து விடுபட்டு மீட்சி பெற வேண்டும் என்ற நோக்கில் படைப்புக்களைப் படைத்துள்ளார்.

## பெண்ணியம்

'Feminism' என்னும் ஆங்கிலச் சொல் Femine என்னும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச் சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண்நிலை ஏற்பு மகளிரியல், பெண் நலக் கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும் கோட்பாடாக மட்டுமல்லாமல் களைய முற்படும் இயக்கமாகவும் திகழ்கிறது.

பெண்ணியமானது பல்வேறு குறிக்கோள்களை உள்ளடக்கியதாக உள்ளது. அவை

- பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க போராடுதல் ஆண், பெண் இருபாலரும் உரிமைகளை ஒருங்கிணைந்து சமத்துவ நிலை நாட்டுதல்
- பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளுக்கும், பணிகளுக்கும் உரிமையுடையவர்களாக இருத்தல்
- பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டுப் படுத்துவனவற்றையும் அவர்களின் முன்னேற்றத்திற்கு கேடு விளைவிப்பனவற்றையும் நீக்குதல்
- பெண்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை ஒருங்கிணைத்து இயக்க உரிமைகளுக்காகப் போராடச் செய்தல்
- பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நிலை நாட்டுதல்
- ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு அதனை அறவே களைதல்
- பெண்களின் மீதான அனைத்து வகை ஒடுக்க முறைகளையும் ஆராய்ந்து அவற்றைப் போக்குவதற்கான தீர்வுகள் மற்றும் விடுதலைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
- பெண்களின் நலனைப் போற்றுதலும் அதனை அடைதலும் அடைந்தவற்றைக் காத்தலும்

இத்தகைய குறிக்கோள்களின் வாயிலாக பெண்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு மீட்சி பெறுவதற்கான வழிமுறைகளாக பெண்ணியம் அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

## தாராளவாதப் பெண்ணியம்

இருக்கக் கூடிய சமூக அமைப்ப மாற்றாமல் அதற்குள்ளேயே உரிமைகள் தேடும் கருத்தியல் தாராள வாதப் பெண்ணியமாகக் கருதப்படுகின்றது என்று விளக்கம் தருகின்றார் (Vasuki, 2005).

கூட்டுறவு வாழ்க்கையிலும் திருமண வாழ்விலும் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒற்றுமைப்பட்டு வாழ்தல் என்பது இனிது. ஆண்குழந்தை, பெண்குழந்தை, கணவன், மனைவி, சகோதரன், சதோதரி, தாய், தந்தை, என்றமைகின்ற வாழ்கையில் ஆணென்றும் பெண்ணென்றும் வேறுபாடு கருதாமல் இன்பம், துன்பம் என்ற நிலையில் ஒத்த தன்மையும் உரிமையும் பேணக்கூடிய கருத்தியல் தான் தாராளவாதப் பெண்ணியமாக முகிழ்த்துள்ளது. இந்த அடிப்படையில் ஆணுக்குப் பெண் சமம் என்னும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டும் தாராளவாதப் பெண்ணியம் பேசப்படுகின்றது.

## திருமணம்

இரண்டு மனங்கள் இணையும் நிகழ்வையே திருமணம் என்ற சொல் குறிக்கிறது. திருமண பந்தத்தில் ஒருவருக்கொருவர் உண்மையாகவும், விட்டுக் கொடுத்தும், புரிந்தும் நடக்கத் தயாராக இல்லாத போது ஏமாற்றமே மிஞ்சுகிறது.

“திருமணமும், சந்தோஷமும் ஒன்று என்று நினைத்துத் திருமணம் செய்து கொள்கிறவர்கள் திருமணத்தில் சந்தோஷத்தைத் தேடுகிறார்கள். எதிர்பார்த்த சந்தோஷம் அங்கு இல்லாத போது ஏமாந்து போகிறார்கள் திருமணம் என்பது விளக்கு மாதிரி தான். கணவனும் மனைவியும் சேர்ந்து அதை ஏற்றனால் தான் சந்தோஷம் என்ற வெளிச்சம் வரும்!” என்று சுவாமி சுகபோதானந்தா கூறும் கருத்தானது எதிர்பார்த்தல் இன்றி எதிர்க் கொள்ளும் போது எதிர்ப்படுதலை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இருந்தால் சந்தோஷமாக வாழலாம் என்பதை அறியமுடிகிறது (Swami Sukhabodhananda, 2008).

ஜெயகாந்தனின் உண்மை சுடும் என்றும் சிறுகதையில் “ஒரு ஆண் கல்யாணம் செய்து கொள்ளும் போது தனக்காகவே செய்து கொள்வதாக நினைக்கிறான். பெண்ணும் அப்படியே நினைக்கிறாள். தனக்காக் செய்து கொள்கிற எந்தக் காரியமும் அதிருப்தியாய்த் தான் முடியும். கல்யாணத்தின் உண்மைத் தாத்பரியம் அதுவல்ல. தனக்காக வாழ்ந்து கிட்டிருந்த ஒருவனோ ஒருத்தியோ இன்னொருவருக்காக வாழறதின் ஆரம்பமே திருமணம். சமூக வாழ்வின சிறு வட்டம் அடிப்படை வட்டம், தாம்பத்யம் இந்த அடிப்படைக் கூட்டுறவிலேயே இந்தக் தியாக உணர்வு ஏற்பட்டாத்தான் சமூக வாழ்வே சிறப்பாய் அமையும். ஆனால் எனக்காக என் சுகத்துக்காகங்கிற நோக்கிலேயே ஆணும் பெண்ணும் கல்யாணம் பண்ணிக்கிற ஒரு சுயநலப் போக்கினாலே தான் தனி மனுஷனின் குடும்ப வாழ்கையும் சரி அதிருப்தியும் துன்பமும் மாறிப்போகுது... நீங்க உங்களுக்காக அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக நினைக்கக் கூடாது. அவளுக்காக..... இதையேதான் நான் அவளுக்கும் சொல்லியிருக்கேன் (Jayakanthan, 2001).

இவ்வாறு கூட்டுவாழ்க்கையில் சுயநலத்தோடு வாழ்வது துன்பத்தைத் தரும். மனைவிக்காக கணவன் கணவனுக்காக மனைவியும் என்ற பரஸ்பர உணர்வோடு வாழ்கையை வாழும் போது இன்பமாக இருக்கும் என்பது புலப்படுகிறது.

## பால்ய விவாக ஒழிப்பு!

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதாக பாரதியார் கூறியுள்ள பத்துக் காரணங்களுள் முதலாவதாகப் “பெண்களை ருதுவாகும் முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது (Subramaniya bharathiyar, 2000). இதுவே கூடாது எனும் பொழுது பால்ய விவாகம் முற்றிலும் கூடாது. தனக்கு என்ன நடக்கிறது என்று அறிய இயலாத பருவம் அப்பருவத்தில் உள்ள பிஞ்சுகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் எனப் பெற்றோர் ஏன் கருதுகின்றனர்.? பெண்ணைப் பெற்றவர்கள் தான் அவளைக் ஒரு சுமையாகக் கருதித் திருமணத்திற்குத் துணிகின்றனர். “கற்பு” என்பதே இதற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

ஜெயகாந்தன் “யுக சந்தி” என்னும் சிறுகதையில் கௌரிப்பாட்டிக்கு பால்ய மணம் முடித்து சிறுவயதிலேயே கைம்மைக் கோலம் பூண்டதை “சிதம்பரத்தில் பிறந்து வளர்ந்து கௌரியம்மாள் தனது பத்து வயதில் இந்தக் கடலூரில் நன்கு செயலில் இருந்து ஒரு குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டாள். பதினாறு வயதில் கையிலொரு குழந்தையுடன் கைம்மைக் கோலம் பூண்ட பின் இத்தகைய கால மாய்த் தன் மகனையும் தன் புருஷன் பங்கில் கிடைத்த வீட்டையும் விட்டு எந்த ஊருக்கும் சென்றதில்லை..... என்று இவ்வாறு நினைத்துக் கூறுவதாக ஆசிரியர் சித்தரிக்கிறார் (Jayakanthan, 2001). காலம் மாறினாலும் கைம்மைக் கோலம் மாறாத கௌரிப் பாட்டியையும் காலம் மாறும் போது மனிதர்களுடைய மூடநம்பிக்கைகளும் மாற வேண்டும் என்பதையும் சீதாவிற்காக கூறுவதாக அறிய முடிகிறது.

“ஏன்டாப்பா உன் சாஸ்திரம் அவளைக் கலர் புடவை கட்டிக்கச் சொல்லித்தோ? தலையைச் பின்னிச் சுத்திண்டு பள்ளிக் கூடம் போய் வரச் சொல்லித்தோ? தன் வயித்துக்குத்தானே சம்பாதிச்சுச் சாப்பிடச் சொல்லித்தோ? இதுக்கெல்லாம் நீ உத்தரவு கேட்டப்போ நான் சரின்னேன். ஏன்? காலம் மாறிண்டு வருது மனுஷாளும் மாறனும்னுதான்” சீதாவின் மறுமண விருப்பத்தை பெற்றோரிடம்

கடிதம் மூலம் தெரிவித்த பிறகு கௌரிப்பாட்டி மட்டும் இவ்வாறு அவளுக்கு ஆதரவாக தன் மகனிடம் முறையிட்டு விட்டு கீதாவிடமே செல்வதாகச் சித்தரிக்கிறார் (Jayakanthan, 2001).

இன்றைய நிலையில் முற்படுத்தப்பட்ட வகுப்பில் இருந்து முன்னேறி பிற்படுத்தப்பட்ட வகுப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கைம்மை மறுமணம் பற்றிய முற்போக்குச் சிந்தனைகள் நிலை கொள்ளுவதற்கு இக்கதை சிறந்த தீர்வாக அமைகிறது.

## கற்பு

கற்பு என்ற ஒன்றைப் பெண்களுக்கே எதிரான ஆயுதமாக எடுத்துக்காட்டிச் சமுதாயம் அச்சுறுத்துகின்றது. அந்த மென்மைத் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளப் பெண்கள் வன்மையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

“கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்”

என்ற பாரதியின் வரிகள் ஆணும் பெண்ணும் கற்போடு வாழ்தலே சிறந்த வாழ்வு என்று விளக்குகிறார். (Meiyappan, 1968). ஜெயகாந்தன் “அக்கினிப் பிரவேசம்” என்னும் சிறுகதையில், “நீ சுத்தமாயிட்டேடி கொழந்தே, சுத்தமாயிட்ட. உன் மேலே கொட்டினேனே அது ஜலமில்லேடி ஜலம் இல்லே. நெருப்புன்னு நெனைச்சுக்கோ. உன் மேலே இப்போ கறையே இல்லே. நீ பளிங்குடி, பளிங்கு மனசிலே அழுக்கு இருந்தாத்தாண்டி அழுக்கு, உம் மனசு எனக்குத் தெரியுறது”. (Jayakanthan, 2001). இவ்வாறு தாயின் உள்ளம் தன் மகள் மீது பட்டுவிட்ட களங்கத்தைத் துடைக்கப் பிராத்தனை செய்து குடம் குடமாகத் தொட்டியிலிருந்து நீரை நெருப்பாக நினைத்துக் கொட்டினாள். அகலிகை கதையைக் கூறி அவள் களங்கமும் அறியாமையால் ஏற்பட்டது என்று உணர்த்தினாள்.

அன்று இராமாயணத்தில் இராமன், சீதையை அக்கினிப்பிரவேசம் செய்தான். தனக்காக அல்ல, உலகிற்காக என்பதை உணர்த்தினான். இன்றும் அந்நிலை ஏழை பெண்கள் வீட்டில் தொடர்ந்துக் கொண்டு தான் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காக ஜெயகாந்தன் அக்கினிப் பிரவேசம் என்று பெயரிட்டார் போலும்.

தவறிய மகளைத் தாயின் செயலே அக்கினிப் பிரவேசமாக அமைந்து எதிர்கால வாழ்வில் விழிப்புணர்ச்சி ஊட்டிப் புதிய கங்கையாகப் பெருக்கெடுத்தோடி ஒளிவிட்டு இருக்க வேண்டியதை இருக்கிற மாதிரி காட்டியுள்ளது அக்கினிப்பிரவேசம். இக்கதையில் வரும் மாந்தர்களுடைய பெயர் தெரியாமலே உள்ளன. பண்டைக்கால அகநூல்களின் நெறிப்படி பெயர் சூட்டாமல் சிறுகதை எழுதிச் செல்வது ஜெயகாந்தனின் தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

## முடிவுரை

பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு மீட்சி பெறுவதற்கான வழிகளாக பெண்ணியம் அமைந்துள்ளதை அறிய முடிகிறது. திருமணத்தில் ஆண், பெண் இருவரும் எதிர்பார்த்தல் இருந்தால் ஏமாற்றம் அடைவதாகவும் எதிர்பார்த்தல் இன்றி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து புரிந்தும் கொண்டு வாழ்ந்தால் வாழ்வு சிறப்பாக அமையும் என்பது புலனாகிறது. பால்ய மணத்தை ஒழித்து கைம்பெண் மறுமணத்தை ஆதரிக்கிறார். பால்ய மணம் முடித்தவர்கள் அல்லல்படுவதாகச் சித்தரித்து அதற்கான தீர்வையும் அக்கதையிலேயே சுட்டிக்காட்டுகிறார். உலகமே திரும்பிப் பார்க்கக் கூடிய மரபாக கற்பைப் பேணி வருவது தமிழரின் சிறப்பு, கற்பு பெண்ணுக்கு மட்டுமே எனக் கூறுவது தவறு என்பதையும் கற்புக்கு மனக்கட்டுப்பாடு அவசியம் என்பதையும் அறிய முடிகிறது. இவரது சிந்தனைகளும் பின்விளைவுகளும் எவ்வளவு காலங்கள் கடந்து சென்றாலும் மற்றைய காலத்திற்குரிய நிகழ்வுகளாக அமைந்து இருக்கின்றன என்பது உறுதியாகிறது.

## References

Jayakanthan, (2001) Jayakanthan Cirukathaikal, Kavitha Publications, Chennai, India.

Meiyappan, (1968) Bharathiyar Kavithaigal, Vaanathi Pathipagam, Chennai, India.

Subramaniya Bharathiyar, C. (2000) Mahakavi Bharathiyar Katuraigal, Palaniyappa Brothers, Chennai, India.

Vasuki, U. (2005) Penniyam Pesalaam Vaanga, Bharathi Puthakaalaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License